# குசேலர்

தி. செல்வக்கேசவராய முதலியார்

Second Edition

RINTED AT THE S. P. C. K. PRESS, VEPERY, MADRAS

# முதல் பதிப்பின் முகவுரை

தமிழ்மொழியில் யாப்புநடைபடக் கோத்த நூல்களே அடிநாள் ...டு இன்றுகாறும் விரிநீர்போல விரிந்துள்ளன. மதிவல்லார் ...ரைத்த நூல்களின் உரையேயன்றி உரைநடையான் இயன்ற நூல் ...ன் முயற்கோடும் ஆகாயதாமரையும் ஆயின ஒரு நாட்டின் நாகரிக ...லைமை மிகுதலும் மிகுதலும், அந்நாட்டில் செய்யுளான் இயன்ற ...ால்கள் பரப்பற்று, உரையான் இயன்ற நூல்களே பல்கும் என்பது ...ன்னாட்டு மொழிகளை முன்னாகப் பின்னாக முற்ற ஆராய்ச்சிசெய்த ...றிவாளர் கண்ட துணிபாம் ...துத்துணிபின் உண்மையை இங்கு ...ராயப்புகுதல் மற்றொன்று விரித்தலாகும். வேற்றரையர்க் கொடு ...மையானும் இருட்பிணியானும் கட்டுண்டு இடர்ப்பட்ட இந்நாட்டில் ...ங்கிலிஷ் அரசியல் ஏற்பட்டபின் இரண்டொரு தலைமுறையாகப் ...ராணேதிகாசங்களைக் கத்தியமாகப் பெயர்த்து வழங்குதலே இக்கூறிய ...ணிபிற்கு ஒருபுடை சான்றாகும்

இங்கிலிஷ் தமிழ்மொழிகள் இரண்டினும் ஒப்பப் புலமைசான் ...வர்கள், "அந்தோ, பொழுதுபோக்காக ஓதுதற்கும், அறிவான்று ...ல்லல் களைந்து நன்மை எய்துதற்கும, இளைஞர் முதலாயினோர் சோம் ...க்கிடக்கும் தம்முள்ளம் கிளர்ச்சிபெற்று ஊக்கமடைதற்கும், இவை ...ான்றன பிறவற்றிற்கும், இங்கலிஷில் போலத் தமிழில் வசன ...ல்கள் இலவாயின என் செய்வது" என்று எங்கும் முழங்குவதே ...றி இக்குறைவுபாட்டினை நிறைவுறுத்தற்கு முயறல் செய்வதில்லை. ...பறல் செய்வார் சிற்சிலரும் தம்மைத் தாங்குநரின்றித் தாழ்ப்பாராயி ...ர்.

இதுகண்ட யான் எட்டாப்பழத்தைப் பார்த்துக் கொட்டாவி விடு ...போன்று, தமிழில் பெருங்காப்பியங்களில் கதைக்கின்றியமையாத ...றை எடுத்துத் தொகுத்தும், வியாசங்கள் பல விரித்தெழுதியும்,

இங்க்லிஷ் மொழியினின்று கதைகள் முதலாயினவற்றை மொழிபெயர்த்தும், என்னால் இயன்றமட்டில் இக்குறையினை ஒருவாறு பரிகரிக்க முயலுதல் ஒருதலை என்றுகொண்டு அறுகாற் சிறுபறவை என்னும் பிண்டப்பெயரிட்டுச் சில புத்தகங்களை வெளியிட எண்ணுவேனாயினேன். அச்சிடாதழிகின்ற அரியநூல்களில் கிடைப்பனவற்றையும், ஒரு முறை பதிக்கப்பெற்றுப் பின் பதிப்பிப்பாரின்றிப் போயினவற்றில் பதிக்கக்கூடினவற்றையும், இதனடியாகவே வெளியிடக் கருதியிருக்கிறேன்.

இங்ஙனம் எண்ணியிருந்தேனை ஒருநாள் நண்பரொருவர் கத்தியமாகத் தமிழில் ஏதேனும் ஒரு கதை எழுதும்படி வேண்டினார். அடியேன் அவ்வேண்டுகோளை மேற்கொண்டு, குசேலமாதவர் சரிதத்தை ஒருவகையான் எழுதி அவர்கைத் தந்தேன். மூலையிற் கிடப்பவனை முற்றத்தில் வலித்து விடுபவராய் அவர் அதனை அச்சிடுதற்கான முயற்சிகளைத் தேடிவிட்டனர். இது அச்சேறிவருகையில் பிழைதிருத்திக் கொடுத்த பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்புலவர் வித்துவான் ஸ்ரீ பூ—கிருஷ்ணசாமி முதலியாரவர்களுக்கும் மேல்சொன்ன நண்பருக்கும் வந்தனமளிக்கிறேன்.

பிரமபூர், சென்னை
1891 ஆம் மார்ச் மீ 1உ

தி. செ.

# இப்பதிப்பின் முகவுரை

இந்நூல் அச்சிட்டு இருபத்தாறு வருஷங்கள் கழிந்தன. இது சில பகுதிகளை மாற்றி 1903 வருஷத்துப் பிரவேச பரீக்ஷையின் பாடபுத்தகத்தில் ஒரு பாகமாகப் பிரசுரிக்கப்பெற்றது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்னே இந்நூலின் முதற்பதிப்புச் செலவாகிவிட்டதனால், அநேக பழைய நண்பர்களுடைய வேண்டுகோளின்படி இப்பதிப்பு இப்பொழுது வெளியாகிறது. திரிபான சில பாகங்களைத் திருத்தியிருப்பதன்றி வேறு மாறுதல் ஒன்றும் இதில் இல்லை. முதற்பதிப்பின் முகவுரையில் கண்டபடியே என் எண்ணம் ஒருவாறு நிறைவேறியது. இவ்வித முயற்சியில் முதலில் என்னை ஊக்கிய இச்சரித்திரத்தை இரண்டாமுறை பதிப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது.

பிரம்பூர், சென்னை
1917 ௵ நொவெம்பர் ௴ 1௳

த. சே.

# குசேலர்

கண்ணன் கழலிணை
நண்ணினர் நற்றுணை.

## I

பூமிதேவியின் அழகிய முகம்போல் விளங்கும் உத்தர மதுரை என்பதோர் திருப்பதி உண்டு அம்முகத்தின் திலகம்போல் விளங்கும் அவந்தி என்பதோர் அணிநகர் அப்பதியின் பக்கலில் உண்டு. அந்நகருக் கணித்தான பெருங்காட்டில் குறவரும் மருளும் குன்றமொன் றுண்டு. அந்நெடுங் குன்றின்கண்ணே ஒரு முனிவர்சேரி இருந்தது. அச்சேரி, அந்தணர் ஓதும் அருமறைமுழக்கும், யாகஞ்செய்வோர் உரைக்கும் மந்திரமுழக்கும், அவர் சுரரைக் கூவி அவியளிக்கும் பெருமுழக்கும், சுரர் அவியேற்கும் செருமலின் முழக்கும், அதனை உண்டபின் அவர் ஆசி செப்பிடு முழக்கமும் ஒன்றியிருக்கும். தருப்பை கொய்வோரும், சமிதை தடுவோரும், மாவிலை பறிப்போரும், பஞ்சகௌவியங் கூட்டுவோரும், பவித்திரம் முடிவோரும், நந்தவனத்தில் மலரெடுப்போரும், பெரியோர்க்கு உபசரிப்போரும் அங்கே விளங்கியிருப்பர். இன்னும் அங்கே யோகியர் ஓரிடத்தும், ஞானியர் ஓரிடத்தும், போதிப்பார் ஓரிடத்தும், வேதங்கற்பவர் ஓரிடத்தும், தத்துவவிசாரம் செய்பவர் ஓரிடத்துமாக வீற்றிருப்பர்.

அச்சேரியில் சுதாமா என்பவர் ஒரு முனிவர் இருந்தார். அவர் அந்தணா அருங்குலத் துதித்தவர்: தூயர்க்குந் தூயர். அவர் திருமாலின் திருவடிகளைத் தாங்கும் உளத்தராய், பொறிகளைத் தீச்செயல்களில் சார்வுறா தடக்கி, நன்மையே புரிந்து, அடக்கம், பொறை கருணை நட்பு என்பவற்றைச் செழுந்தருந் தவத்தோ டொருங்குற வளர்ப்பவர். இளமையில் இவரும் கண்ணனும் ஒருசாலைமாணாக்கர். பசித்துழ

லவித்துச் சாந்திராயண முதலிய விரதங்களைப் பன்னெடு நாள் அநுட்டித்துத் தசைவற்றி என்பொடு நரம்புகள் தோன்றி இவர் இளைத்த உடலினராய் விளங்கியிருந்தார். வைகறை யாமத்தில் துயிலுணர்ந்தெழுந்து, விதிப்படி காலைக்கடன் முடித்து, நீராடி, சந்தி சபம் தபம் முதலியவற்றை நியதி யருது இயற்றுவார். கிழிதுணி பலவற்றை இயைத்துத்தைத்த சீரையினையே உடுத்திருத்தலால் அனைவரும் இவரைக் குசேல ரென்று பெயர்வழங்குவர்.

தானியற்றும் தவத்தினுக்கு உதவிசெய்யுமாறு இவர் ஒரு கன்னிகையை மணஞ்செய்துகொண்டார் அவள்

தணவறும் அன்பும் சாந்தத் தன்மையும் நன்மையான
குணமுமோர்உருவங்கொண் டோர்குடிப் பிறந்தனைய நீராள்:

மாசிலாக் குலத்து வந்தாள்: வருவிருந் துவப்ப ஊட்டும்
நேசமிக் குடையாள்: கொண்கன் நினைப்பறிந் தொழுகும் நீராள்:
தேசுறு வாய்மை யுள்ளாள்: சினந்திடல் என்று மில்லாள்:
பேசுதிண் கற்பு வாய்ந்தாள்: பெற்றதே கொண்டுவப்பாள்:

சுசீலை என்று பெயர்சொல்லப்படுவாள் அவளிடமாகக் குசேலர் இருபத்தேழு மைந்தரைப் பெற்றூர். அதனால் வறுமை மிக்கது.

பல்லெலாந் தெரியக் காட்டிப் பருவரல் முகத்திற் கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்லி நாட்டித் துணைக்கரம் விரித்துநீட்டி
மல்லெலாம் அகலவோட்டி மானமென் பதனை வீட்டி
இல்லெலாம் இரத்தல் அந்தோ இழிவிழி வெந்த ஞான்றும்

ஆதலின், எவரிடத்தும் இரத்தல் செய்யாது, காட்டில் கொள் வாரின்றி உதிர்ந்துகிடக்கும் நீவாரத்தைக் கொண்டுவ[illegible] மனைவிகையில் கொடுப்பார். அதனை அவள் குற்றிப் பா[illegible] செய்து இலைக்கறியோடு அதிதிக்கிட்டு, மைந்தர்க்கும் ம[illegible] னுக்கும் பரிமாறி, மிகுந்ததை உண்டு, அது பற்றுமல் உட மெலிந்து உழன்றுவந்தாள் உள்ளதை உண்டு குசே[illegible] திருமாலின் திருவடியைத் தியானித்திருப்பார்.

இவள் ஒரு மகவினுக்கு உணவு அளிக்கும்போது [illegible] மகவு கைந்நீட்டும்; முந்தி மேலிருந்து இரும்கவும் [illegible]

நீட்டும்; மும்மகவும் கைந்நீட்டும்: என்செய்வாள் பாவம். ஒரு பிள்ளை வீறியழும்; ஒன்று நிலத்தில் விழுந்து புரண்டழும்; மற்றொன்று கண்பிசைந்தழும். இவற்றையெல்லாம் எங்ஙனம் சகிப்பாள். ஒரு சேய் என்வயிற்றி லெழுந்த பசி அடங்கிற்றில்லை என்றழும்; ஒன்று சிந்தாத கஞ்சி எனக்கு வாக்கிலே என்று பொய்சொல்லும்: ஒரு சேய் உண்ணப்புகும் போது அதனை மற்றொன்று பற்றியீர்க்கும் இங்ஙனமாகக் கலாம் விளைக்கும் மைந்தரை நோக்கி, இரங்கியேங்கி, அவர் களைத் தன் கைகளால் அணைத்து மடிமீதிருத்தி அவர் கண் களினீரைத் துடைத்து, முகம் முதுகு முதலியன தைவந்து, முத்தங்கொடுத்து, ஆற்றல்செய்வாள்

இச்சிறுவர்கள் விளையாடியிருக்கையில், அடுத்தமனைச் சிறா னொருவன் "உமதகத்தில் அட்டகறி என்னை" என்று வினவினால், அதுகேட்டு அவர்கள் அன்னைமாட் டோடி, "அன்னாய், கறி என்பதற்குப் பொருள் யாது? எடுத்துரை" என்ன, அவள் "அதனை உரைத்தால் செய்துதரும்படி வேண் டுவரே; என்செய்வாம்" என்று கருதி, "என் கண்மணிகாள், யான் அறியேன்" என்றுரைத்து, வேறு வார்த்தைகளைப் பேசி அதனை மறக்கச்செய்வாள். வேறுமனைச் சிறுவன் உண்ணும் சிற்றுண்டி கண்டு ஓடிவந்து, "அன்னாய், அந்தச் சிறுவன் என் னவோ உண்கிறான் அதனை இப்பொழுதே எனக்குச் செய்து கொடு" என்று சொல்லி, உடுத்த உடையைத் தொட்டீர்க்கும் சிறு பிள்ளையை எடுத்து மார்போடணைத்துச் சிந்தைநோவாள். "அயலகத்தார் தம்முடைய குழந்தைகட்குக் குண்டலம் மோதிரம் கடகம் முதலியன இட்டனர். எங்களை நீ அங் ஙனம் அணிந்துபார்க்கப் பொறாத தென்னோ? அவற்றைக் கண்டெடுத்து இப்பொழுதே எமக்கிடுவாய்" என்னின், பொருளில்லாதவன் கடன் தந்தவனுக்குச் சொல்வதுபோல், நாளைக்காகட்டும் நாளைக்காகட்டும் என்று சொல்லிவருவாள்.

சிறுவர்க்குச் சிதமணிப்பூணன்றி வேறொரு பூணும் இல்லை; மாவுரியேயன்றி மற்றோ ருடையும் இல்லை; இலையுண்கலமல் லாது உண்கலம் பிறிதொன் றில்லை. உள்ளே புகும் எறும்பி னுக்குத் தானும் அங்கு உணவுகிடைப்ப தில்லை. வீட்டில்

அன்னப்பாலன்றி வேறு பால் இல்லை. பாலர்க்கோ பசிதீர்ந்த பாடில்லை. இவற்றைக் கண்ட முனிவர் எவ்வளவும் மனங் கவலல் இல்லை. இதுகண்ட மனைவியும் இவர்மாட்டு வெறுப் புறுதல் இல்லை. வெருவாய் மிக்குடையாரும் தமது அன் புடைய ஓரொருபிள்ளை எண்ணியவாறு இயற்ற இயலாது இடர்ப்படுவராயின், இடும்பிடியில் பல பிள்ளைகளைப் பெற்றவள் செய்கை என்னையென்னை. இப்பிடியிலெ கரைகாணா தழுங் குவாள், தன் அகமுடையானையும் வெறுத்துரையாள்; அலர் மொழிகள் சிலவும் செப்பாள் மறந்தும் மைந்தர்பால் மனஞ் சலியாள இவருடைய சுகுணம் இருந்தவாறு என்னே. இத்துயர்க்கடலை எங்ஙனம் நீந்துவம் என்றே எண்ணம் அவள் உளத்தில் எழுந்திருந்தது

பலவாண்டுகள் இங்ஙனம் கழிந்தன. சுசீலை ஒருநாள் அமைய மறிந்து, உளந்துணிந்து. கணவனை நோக்கி "ஐயரே, நம் சிறுவர்கள் பசிதீ உண்பதற் கில்லாமை வாடினர். அவர் கள் சிறப்புற அருளுதல் தேவரீர்க்குக் கடனுமன்றே இவ் வுலகில் மிடியுற்றோர் பாவியர். செலவமுற்றோர் புண்ணிய ரன்றோ.

தரித்திரம் மிக்க வனப்பினை ஒடுக்கிச்
சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும்:
சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் தலைவன் தலைவியர்க் கிடையே
தடுப்பருங் கலாம்பல விளைக்கும்
தரித்திரம் அவமானம் பொய் பேராசை
தரும்: இதிற் கொடியதொன் றிலையே.

தரித்திரம் களிப்பாம் கடலுக்கோர் வடவை:
சாற்றும் எண்ணங்கள்வாழ் இடமாம்.
தரித்திரம் பற்பல் துக்கமும் தோன்றத்
தக்கபே ராகரம் என்ப.
தரித்திரம் நன்மைசால் ஒழுங்கென்னும்
தழைவனந் தனக்கழல் தழலாம்.
தரித்திரம் கொடிய எவற்றினும் கொடிது. அத்
தகையதை ஒழித்தல் நன்றாமே.

யாதவர் குலத்தில் தோன்றி அரசர்க்கரசனாகிய ஸ்ரீ கிருஷ்ணனை உம்மோடொருங்குகற்ற ஒருசாலைமாணாக்கன் என்கின்றனர் எல்லோரும். ஆதலின் அவனருகணைந்து அரும்பொருள் பெற்றுவந்து நம் சிறுவரது செல்லலையைத் தவிர்த்தல் வேண்டும். உம்மைக் கண்டவளவில் அவன் உமக்கு வேண்டிய பொருளெலாம் உதவுவான். ஐயம் சிறிதும் இன்று.

பளகறு நேசன் ஒருவனைப் படைத்தல்
பருந்தனப் பொறிபெற்றாற் போன்மென்
றுளமிகத் தெளிந்தோர் புகலுநன் மாற்றம்
உண்மையாம், பொய்ம்மையாகாதே

அக்கண்ணனும் கஞ்சன்முதலிய இன்னாதார்க்கும் இன்புற அளிப்பவனாதலின், அவனிடம் சென்று செல்வம் வேண்டுதிர். கொடாது மறுத்தானெனினும், அவன் திருவடியைக் காண்டலே அமையும். வீடுபெறுதற்கும் அஃதோருபாயமாம். ஆதலின் எண்ணிய எண்ணியாங்களிக்கும் மாயனை நண்ணி வருதிர்" என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்ட முனிவர் உரைக்கலுற்றனர்:— சுசீலா, கல்லினுட் டேரைக்கும் கருப்பையுண் முட்டைக்கும் உணவளித்துக் காக்கும் ஒருவன் உன் மக்களைமாத்திரம் மறப்பனோ? மறவான். இது உண்மையே. நீ கொண்ட துன்பத்தை விட்டுவிடு. அற்றைநாள் பிரமன் விதித்த ஆயுளின் அளவுகாறும் அவரவருடைய வினைக்குத்தக்க விருப்புணவும் வெறுப்புணவும் உண்டு என்பர் உணர்ந்தவர். ஆதலின், உன் மைந்தர்க்கு ஆயுளுள்ளவரையில் இருவினைக்கேற்ப உணவுண்டு. நீ மனமறுகல் வேண்டா.

ஏது வந்தாலும் ஊழால் என நினைந்திருத்தல் வேண்டும். உலகியல் நன்குணராய் உன்னைப் பொருட்பேய் பிடித்ததோ? பொருள் பெற்றவர்கள்

ஒருசிறு தருமமேனும் உஞற்றிடார். இரப்போர் வந்து
'தருதிர் காத்தாய்' என்று சாற்றினும் கொள்ளாராகிக்
கருணைசற் றின்றி எல்லை கடந்திடத் துரந்துமீள்வர்.
மருவுபல் கிளையும் ஓம்பார். வளம்படைத் தென்பெற்றாரால்?

முறைதவிர் கொடுங்கோல் மன்னர் முனிவிற்கு நணியும் அச்சம்.
கறைகெழு களவுசெய்வார் காத்திற்கும் அழற்கும் அச்சம்.
மறைவறு தாயமாக்கள் வெளவுவர் என்றும் அச்சம்.
அறைபொருள் பெற்றாரல்லர்: அச்சமே பெற்றார் போலும்.

பொருளோ

பொருவறு பந்தமெல்லாம் புணர்த்திடும்; தெய்வசிந்தை
ஒருவ மேலிட்டுநிற்கும்: உறக்கமும் இறக்கச்செய்யும்:
கருவினுள் புகுத்தும் இன்ன கரிசுகண் டதனாலன்றோ
இருநிலத்திடை வெறுக்கை என்மனர் புலமைசான்றோர்

சிறியரே மதிக்கும் இந்தச் செல்வம்வந் துற்ற ஞான்றே
வறியபுன் செருக்கு மூடி வாயுள்ளார் மூகராவர்;
பறியணி செவியுளாரும் பயில்தரு செவிடராவர்;
குறிபெறு கண்ணுளாரும் குருடராய் முடிவரான்றே

பல்கதிர் விரித்துத் தோன்றும் பாடுசெய் கதிரேபோல
மல்லல்நீர் உலகில் தோன்றி மறைந்திடும் நும்மைவிட்டுச்
செல்வமென் றுறுவதற்கும் செல்வமென் றுரைக்கும்பேர்நன்(று.)
அல்லலை விளைப்பதாகா தரும்பெறற் செல்வந்தானே

ஆகவே அன்ப ரகததிலே புகுநதுவாழும் எம்பெருமானது இணையடி பெறுதலே என்றும் அழியாத செல்வமாகும் நீ வீணாக மக்களை நோக்கி மனம வருந்துகின்றாய்

மதலையைப் பெறுநாள் துன்பம்; வளர்த்திடு நாளும் துன்பம்;
விதலைநோய் அடையில் துன்பம்; வியன்பருவத்தும் துன்பம்;
கதமுறு காலர் வந்து கைப்பற்றில் கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால், எற்றைக்கும் துன்ப மாஞல்?

இளமையில் இயற்றும் தண்டம் ஏற்றும் எவ்வெறுப்புய்த்தாலும்
உளம்நடு நடுங்கிப் பின்னி உற்றுறப் பற்றி நிற்பார்
தளர்வறு பருவம் சார்ந்தால் தந்தைதாய் நடுங்கச் சீறி
அளமரு தம்மனஞ் செல் அவ்வாறே ஒழுகி நிற்பர்

தந்தையரும் தாயரும் அனந்தம்; சன்ம வூரும் அனந்தம்; வாய்த்த உறவும் அனந்தம்; பெற்ற பேரும் அனந்தம்; கன்மப் பெருக்கமும் அனந்தம்; கொண்ட சீரும் அனந்தம்; இன்னும் சேர்வதும் அனந்தமாகும். ஆகவே மைந்தர் ஆர்?

நீ யார்? இஃதுரைக்கும் நான் யார்? மக்கள் மனைவியரைக் காக்க நான் திருமாலல்லேன். மைந்தராசையால் கோட்பட்டு வருந்துகின்றனை. இது பித்தர் செய்கை பெரியோர் இம்மயக்கங் கொள்ளார் எல்லோரும் நல்வினை அடைந்த காலத்து, நனிநலம் துய்ப்பர்; தீவினை அடைந்தபோது அல்லலெய்தி இடர்ப்படுவர் தோன்றும் அனுபவங்களெல்லாம் தொல்வினை வழியவாகும அவற்றைத் தத்தம் புல்லிய வினையால் தோன்றியவை என்றெண்ணுதல் அறிவாளரிடத் தின்று. பாற்கடலில் உள்ள மீன் அப்பாலினை விரும்பாது வேறொன்றை விரும்புமாறு, எம்பிரான் திருமுன் சார்ந்து நாற்கதி கடக்கும் செல்வத்தை நண்ணிடாமல் துன்பந்தரும் செல்வத்தையோ நண்ணுவேன் யான்?

மானமற் றிழிவுபூண்டு வளமனைக் கடைதோ றெய்தி
ஈனமுற் றிரந்திரந்திவ் உடல் பருத்திடச் செய்தாலும்
தூநகைக் கரிய வாட்கண் சுடர்த்தொடீ! நிலைப்பதன்று:
பேனமார் வெள்ளநீரில் பிறந்திடுங் குமிழிபோலும்

ஆதலால், நன்றியில்லாத இவ்வுடலைப் போற்றுதல் நல்லார் செய்கை அன்று யான் இக்குடும்பச் சேற்றில் உழன்றிடேன்

முனிவர் உரைத்த இவ்வனைதனதயும மசுவமயுமு, இவையெல்லாம் உண்மையேயென் றுணர்ந்தனளேனும், மைந்தர்பால் வைத்த ஆசைமயக்கம் அருளாகிப் பின்னும் கணவனை நோக்கி உரைபபாளாயினள்: — எம்பெருமானே, நன்முயற்சியைச் செய்யாதவனுக்குச் செல்வம் எங்ஙனம் ;ம்?

மானிடன் ஒருவன் தனக் கருஞ்செல்வம்
வாய்க்களன் றநதினம் முயற்சி
தானுஞற்றுவனேல் கடவுளும் அதனை,
தந்தளிக்குவன் அதா லன்றோ
ஆனபேரறிஞர் திருவினை முயற்சி
ஆக்கும்: அம்முயற்சி யில்லாமை
ஈனமார் இன்மை புகுந்திடுமாலென்
றியாரு நன்குணர்தர நவில்வார்

எல்லாம் வல்ல எம்பெருமான் நாம் வேண்டியவெல்லாம் ஈவானென்று கருதி, செய்யத்தகும் முயற்சி ஒன்றும் செய்யாது வாளா இருப்பின், அப்பெருமான் யாங்ஙனம் அருளுவான்? முற்பவத்தில் செய்த நல்வினைப் பயனால், முயற்சியின்றியே மனிதர் விரும்பிய எல்லாவற்றையும் அனுபவிப்பாரென்னில், 'சுவாமி சாட்டும்; ஊட்டுமோ?' என்பது உலகியல் அரிசியும் அதற்குரிய உபகரணங்களும் பெற்றிருப்பினும், ஒருவர் அவற்றை அடுதல் முதலிய முயற்சி செய்யாவிடின் பசித்துயரம் தணிவதெங்ஙனம்? கஜேந்திராழ்வானும் பிரகலாதாழ்வானும் துன்புற்றபோது அன்பினோடேத்தி அழைத்ததாலன்றோ அதிவேகமான பரமன் வந்து அவர்களை ஆண்டனன்? அழுத குழவிக்கன்றோ அன்னையர் பாலருத்துவர்? முயற்சி செய்வார் எய்துதற்கரிய பொருள் ஒன்றுளதோ? ஆதலால் நாவீர் சென்று கண்ணனை வேண்டின், அவன் நீங்கள் வேண்டியவைகளை வேண்டியவாறே அளிப்பான். புரந்தராதியோர் போற்றிக் குறையிரக்கும் அப்பெருமானைச் செல்வம் வேண்டி இரப்பதில் இழிவுண்டோ? அப்பரந்தாமனுடைய அடியிணையன்றி ஆதரவு நமக்கு வேறுண்டோ? அன்றியும் குலமகட்குக் கொழுநனே தெய்வம் என்பர்: ஆகவே என்னைப் புரப்பது உம்முடைய பொறுத்த கடனாயிற்று. புதல்வர்க்குத் தெய்வம் தந்தையும் தாயு மாதலால், மக்களைக் காப்பது இருவேமுக்கும் கடனாயிற்று

சுசீலையின் வார்த்தையைக் கேட்டுக் குசேலர் அதற்கு உடன்படுவாராகி, "கண்ணனைக் காணப்பெற்றால், கண்பெற்ற பேறும் பெறுவோம்; நற்கதி உறுவோம்; மைந்தரால் உளம் நையும் இவளுடைய எண்ணமும் நிரம்பும்" என்றுகொண்டு

தெய்வம் குரவன் அரசன் திருமுன்னர்ச் செல்வோர்
மெய்வந்த அன்னார் அருள்வேண்டி விரும்பெதேனும்
கைவந்த பெற்றுச் செலீஇக் காண்குவர்.

யான் கண்ணன் முன்பு என்கொண்டு செல்வேன்?

தெறுநிரப்புள்ளோர் வாழ்ந்திடு செல்வர்பால்
செல்வரேல் மதியார்கள்;
மறுவுறுத் தவமானமும் இயற்றுவர்.
மான முள்ளவராயின்

குறுகுமவ் வவமானத்தால் உயிர்விடு
கொள்கையிற் றலைநிற்பார்
நறுமலர்க் கூழால்! ஆதலால் அவரிடை
நண்ணல் நன்றென எண்ணேல்.

இருங்கடற்புவி யிடத்தின் இல்லாரை
எல்லாரும் எள்ளுவ ரென்று
ஒருங்குணர்ந்த முன்னோர் உரைத்திட்டம்

நெருங்கு பற்றுறு தாய்தந்தையரு
நிரப்புறுநரை வெறுப்பாரேல்
சுருங்கு மன்பின்மற் றெவர் வெறுத்திடாதவர்?
தூநகை மலர்க்கொம்பே.

ஒன்றும் வேண்டல ராயினும் செல்வர்பால்
உறுமிடியவர் சார்ந்தால்,
இன்று வந்தமை யாதினைக் கருதிமற்
றிவரென உளத்தெண்ணிக்
கன்றுமாறு பல் குறிப்புரை நவிற்றுவர்;
காதலி னவர்பால் போய்
மன்ற வந்தது சிறுமையே இவர்க்கன்றி
மற்றிலை யறி பாவாய்.

யான் இவ்வா றுரைத்தது என்னென எண்ணிடேல். இது மாணிடர் தன்மை. பரம்பொருளாகிய பெருமானிடம் செல்வது தகாதென உரைத்தேனல்லேன் அவ்வையன்முன் கையுறையின்றி யான் எங்ஙனம் ஏகுவேன்? மலையத்தனை தெய்வத்திற்கு மலையத்தனை மலர்கொண்டு அருச்சிப்பார்களா? இல்லை. ஏதாவது கையுறை கொண்டே முன்னுறல் வேண்டும்" என்றுரைத்தார்.

அவ்வுரை கேட்டுச் சுசீலை அகமகிழ்ந் வெய்தி, கையுறை தேடற்குச் செய்வது யாதெனன் றெண்ணி, உபாயம் ஒன்று செய்தாள். அன்றுமுதல், முனிவர் கொண்டுவந்து கொடுக்கும் தானியத்தில் அன்றன்று சிறிது சிறிது சேர்த்துவைத்து, நாள் சில கழிந்தபின் அதனை அவலாக இடித்துத் தன் கணவ

னுடைய கந்தையில் ஒருபால் முடிந்துகொடுத்து, "இனி இக் கையுறைகொண்டு எம்மானிடம் இனிதுபோய் வருக" என்று சொல்லி விடுத்தாள். குசேலமுனிவரும் வழிதேடிச் செல்ல லுற்றார்.

## II

முன் எப்போதும வழிநடந்தறியாத முனிவர், பாவம், கட்டுச்சோறு முதலிய வழிநடை யாதாவு மொன்று மின்றிச் செல்கின்றவர், வழிபபோக்கரை வினவி வழிதேர்ந்து பல காவத தூரம் கடந்துசென்றார் கவட்டை நெறிகளைக் கண்டு கலங்கி, இந்நெறியே சென்னெறியாம் செநநெறியெனத் தேர்ந்து சென்று, மலைகள் பல்பல, காடுகள் பற்பல, நாடு கள் பலப்பல, நகரங்கள் பலபல, நன்னதிகள் பலவும் கடந்தார். அப்போது வேனிலாதலால் கீழே கால்வைக்க வும் இயலாமல் மண்ணுமநீரும் கொதிப்படைந்திருந்தன. காற்று அனல் வீசியது முனிவர் பசியால் மிகவும் மெலி வுற்றார்; பசிய மரநிழலில் தங்கியிருநதார்; நீர் நசையால் வாய்புலர்ந்தார் வழிநடக்கும் நமக்கு இவ்வூரில் பழக்க முடையார் இல்லாமையால் உறங்குவதற்கு இடங்கொடுப் பார் எவருளர் என்றெண்ணி யிடர்ப்பட்டு, மாலையில் எதிர்ப் பட்ட ஆலயங்களின் எதிரிலே உறங்கியிருந்து உதயகாலத் துக்கு முன்னே எழுந்து வழிநடந்தார். காட்டிலே வேலின் முள் தைத்துக் காலூன்ற முடியாமல் இடர்ப்படுகின்றவர் ஓரிடத்தில் இருந்து எண்ணலுற்றார்:—

செறிதருதன் மனப்படியே செய்த லொருவற் கினிதாம்.
அறிவுறுக்குங் குருமொழிகேட் டாக்க லஃதினும் சிறப்பாம்.
முறிதரு மேதிலர் சொற்கேட் டொழுகல் முனிதுயர். மனையாள்
வறியவுரை கேட்டொழுகல் மண்ணிறல் சேர் கெடுதியுறும்.

இது தெரிந்தும், மனையாட்டி உரைத்த வார்த்தைக்கு உடன் பட்டு, வெயிலால் உடல்வருந்தி மூர்ச்சித்து மெலிகின்றேன். ஐயோ, முன்பின் பாராமல் புறப்பட்டுப் பல காவதம் கடந்து வந்துவிட்டேன். துவாரகாபுரி இன்னும் நெடுந்தூரத்திலுள்

ளது என்கின்றனர் வழிப்படுவோர். அந்தோ, யாது செய்வேன் மற்ற வழியுங் கடக்க வலியில்லை அங்ஙனம் கடந்தாலும், இடையில் கடலைக் கடத்தல் வேண்டுமே அதனை யாருதவி கொண்டு கடப்பேன் அங்ஙனம் அதனையுங் கடந்து செல்வேனாயினும், துவாரகையில் என்னை மதிப்பார் எவருளர்? ஐயோ, சற்றும் உணராது வழித்தலைப்பட்டேனே என்னே. என்ன காரியஞ் செய்துவிட்டேன் காணக்கிடைக்காமல் மாமன்னர் காத்திருக்கும் அரண்மனைவாயிலை நான் எங்ஙனம் குறுகுவேன்? அவ்வாயிலில் புகுவேனாயினும் அப்பெருமானுடைய சேவை ஏழையேனுக்கு எளிதில் கிடைக்குமா? அங்ஙனம் கிடைக்கப்பெறுவேனாயினும், கற்பகத்தைச் சார்ந்தும் காஞ்சிரங்காய் கேட்பார் போன்று, நிலையில்லாத செல்வத்தை எம்பெருமானிடம் எங்ஙனம் வேண்டுவேன்?

இவ்வண்ணமாக எண்ணியிருந்து இளைப்பாறி, "இனி எவ்வகைத் துயர் உறினும் உறுக இதுகாறும் வந்துவிட்டேன் மனையாட்டியிடம் உரைத்தவாறு கண்ணனைக் கண்டு வருவதே கருமம்" என உறுதிகொண்டு எழுந்து சென்று சில நாளில் மேற்கடலின் கரையை அடைந்தார் அங்கே மந்தமாருதம் வீசுதலால் ஒரு புன்னைமரநிழலில் இருந்து "இம்மீகாமனுக்குக் கொடுக்க இம்மியளவும் பொருளில்லை அவன் பொருள் வேண்டாது என்னைக் கலத்தில் ஏற்றிக்கொண்டு போகத்தக்க சிறப்பு என்னிடம் ஒன்றுமில்லை கண்ணன் சேவைக்காகச் செல்கின்றேன் என உரைப்பினும் அதனை அவன் மெய்யென்று கொள்ளான் இனிச் செய்வது வேறில்லை: இவனை இன்சொல் கூறி இரப்பதே நன்று" என்று நினைத்து, மீகாமனைச் சார்ந்து அவன் மனமிரங்குமாறு பலவார்த்தை சொல்லி மரக்கலம் ஏறினார் கலமும் கடல்கிழித் தோடித் துவரைத் துறையில் இறுத்தது இறங்குவாரோடிறங்கிக் குசேலர் இறும்பூதெய்தித் துவரைப் பதிக்கண் உற்றார்.

உடனே முனிவர் விசைகொண்டு நடக்கத் தொடங்கி, மரங்களின் நிழலில் சென்றால் எறும்பு முதலிய சிற்றுயிர்கள் சிதையுமென் றிரங்கிக் கையை விரித்துத் தலைமேல்

கவிந்து வெயிலில் சென்றூர் செல்பவர், புடை நகரையும் இடை நகரையும் கடந்து, மதிற் பெருவாயிலேயும் கடந்து, வசிய வேளாண் மாந்தர் வசிக்கும் வீதிகள் கண்டு, பார்ப் பனச்சேரியை நோக்கி அரசவீதியில் புகுந்தார் அந்நகரின் வளங்களைக் கண்டு அற்புத முறுதலால், சேணெடுந்தூரம் நடந்துவந்த இளைப்பும் வருத்தமும் சிறிதும் இல்லையாயின. பசியும் பறந்தது. நாவில் நீர் ஊறியது அரசவீதியில் சிறிதாறு கடந்தவாறே குசேல முனிவர் அரண்மனையின் தலைவாயிலைச் சார்ந்தார்

தலைவாயிலின் சிறப்பெலாங் கண்டு குசேலர் உள்ளத் தில் திகைப்புக் கொண்டு, உளங்கொளா உவகை எய்தினூர். "இவ்விடம் எள்ளிடுதற்கும இயலாத பெருந்திரள் நிறைந் துளது யாம் ஒரு கற்பகாலம் காக்கினும் உள்ளுறச் சார்த லான சமயம் வாய்ப்பது அரிதாயிராநின்றது" என நினைந்து கன்னல் பல காத்தார் சனத்திரள் குறையவில்லை வருவன வருக என்று துணிந்து நெருங்கினூர் அங்கே ஓராசனைச் சூழ்ந்த அங்கக்காவலர் வாள்கொண்டு துப்பபத தூரத்தே அகன்றூர் மீட்டுந் துணிந்து மற்றேரிடம் மேவினூர் அங்கே அரசர் கொணர்ந்த கையுறைப் பொருள்கள் தொகுத்திருந்த தனல், காவற்சேவகர் பலர் சூழநின்று எவரையும் நெருங் காதபடி நீக்கியிருந்தனர் அதனூல் முனிவர் அங்கு நிலைக்க முடியாமல் ஓடி உய்ந்தார் எங்ஙனம் உள்ளே புகுவதென்று ஏங்கியிருந்தவர், படைகள் புடைசூழ மன்னனெருவன் வந் தடைந்ததைக் கண்டு, படையின் இடையே புகுந்தார் நெருக் கத்தால் உண்டான வருத்தங்களைப் பொறுத்து மெல்ல மெல்ல நடந்தார். சேனைநெருக்கினுட் பட்டு ஒரு சமயம் கால் நிலத்துறுமல் மேலுறக் கிளம்பியும், கரங்கள் மேலெடுத்தும், கையிடிப்புண்டும வளைந்தும், ஒரு சமயம பெருகிவழியும் வியர்வையில் மூழ்கியும், இங்ஙனம் உள்ளுறச் சார்ந்து, அப்பா இது நமக்கு இரண்டாம் பிறப்பே என்று நினைத்துத் துவாரபாலர் நிற்கின்ற இடத்தினை அடைந்தார்.

அடைந்த அளவிலே குசேலர் அவர்களை நோக்கி "மக்க ளுள் மிக்கீர், கண்ணனுக் கடியீர், என் ஆசி கொண்மின்.

உங்களை நோக்குந்தோறும் கண்ணனையே கண்டாற் போன்ற உவகை உதிக்கின்றது எளியேன் மறையவர் குலத்து வந்தேன்: குசேலன் என வழங்கப்பெறுவேன்: எம்மான் கண்ணனோடு இளமையில் பலகலை பயின்றுளேன் நானும் கடலும் கடந்து வந்தேன் இவ்வாயிலைக் கடந்து கண்ணனைக் காண நினைந்தேன். இனி நீர் அச்சுதன்பால் அணைந்து ஏழையேன் வரவை அறிவித்து என்னை அவண் சேர்த்தல் வேண்டும்" என்றுரைத்தார்

உரைத்ததைக் கேட்ட கடைகாவலரில் அறிவிலார் சிலர் உரைக்கலுற்றனர்:— ஓய் பார்ப்பானே, வயதுக்கோ நரைத்தது மயிருக்கோ நரைத்தது. உனக்குப் பகுத்தறிவென்பதே இல்லையோ? கண்ணன் எங்கே நீ எங்கே? மதயானையும் மசகமும் போலும், மலையும் மண்ணாங்கட்டியும் போலும், சூரியனும் மின்மினியும் போலும் உமக்குள்ள ஏற்றத்தாழ்வு. மன்னர் திருவோலக்கத்தை என்னென்ன நினைந்தாய்? அங்கு அடைவார்க்குரிய தன்மை உம்பால் ஒன்றேனும் உளதோ?

பொருள்கனி உளனென்று யாரும் புகலு மோர்வாததை வேண்டும்:
இருகையும் கடகம் வேண்டும்: இலங்கு குண்டலங்கள் வேண்டும்:
வருவிரல் ஆழி வேண்டும்: மார்பிடை மதாணி வேண்டும்:
உருவ முத்தாரம் வேண்டும்: உயர்ந்த பட்டாடை வேண்டும்:

சிவிகை முன் ஊர்தி வேண்டும்: செழும்பொருள் செலவு வேண்டும்:
குவிகை ஏவலரும் வேண்டும்: கோலமார்ந் திருக்கவேண்டும்:
கவிகை தாங்குநரும் வேண்டும். கையுறை சிறப்ப வேண்டும்:
அவிகையில் விளக்கம் வேண்டும் அரசவை குறுகுவார்க்கே

இலகுமோர் நகாச்செல்வ ரிடத்தினும் செல்வர் நட்பே
நிலவுற நிற்கும்; ஏழை நீர்மையர் நட்பு நில்லாது

நேற்றுண்ட உண்டி இன்னதென்று இன்று நினைவுவைப்பாரில்லை. உன்னுடைய முன்னாள் நட்பை முகுந்தன் இன்னும் மறந்திடாதிருக்கின்றானோ? அரசவை குறுகுவார் சிறப்புறச் செல்வராகில் அங்குள்ளார் அவரைச் சிறப்புற உபசரிப்பர்: பீடையுற்றவராகில் பிடர்பிடித் துந்துவர்.

கோதறு கல்விசாலூர்க் குடியிருந் தறியானேனும்
ஓதரும் செல்வம் மிக்கோன் ஒருவனே சிறந்தோ னவன்:
காதலின் வேதமுன்னும் கலைகள்கற் றுணர்ந்தோனேனும்
தீதமை மிடியனுயின் சிறந்திடான் வேத்தவைக்கே.

கலைபயில் நாள் நட்பென்று கூறுகின்றாய். கண்ணன் அந் நட்பினை நினைந்திருப்பானாயின் இத்தனை யாண்டுகளில் முடங் கல் இரண்டொன்று போக்கியிருக்கலாமே: தூதுவரைப் போக்கி உன்னை வருகவென் றழைக்கலாமே முந்தைநாள் நட்பைச சார்பாகக் கொண்டு நீ செல்லுதல் கூடாது. அந்நட்பென்று அரசரிடம் அற்றநோக்காது செலவினும் அவ மானம உண்டாகும். தன்வீட்டு விளக்கென்று முத்தமிட லாமா? போவாக கொண்டு வழிநடந்து இளைத்தனை, பாவம் மெய்யும மொழியும் ஏன் இங்ஙனம செய்தாய்? உன் குலத் தொழிலைச் செய்து சீவிக்கலாகாதா? இந்திரன் குபேரன் என் பவர்களே வழிபெயாமல் இவ்வாயிலிடம கண்ணன் சேவைக் காகக் காத்திருக்கின்றனரே மன்னர் மற்றவரைக் கண்டிலை போலும அங்கு நின்றவனைக் காணுதி: இவன் மகதநாடா ளும் மன்னன் இவனணித்தாக நிற்பவன் கொங்கணநாட்டு வேந்தன் ஊங்கு நிற்கின்றான் கூர்ச்சரநாட்டு வேந்தன் அவனுக்கு அண்மையில் நிற்பான் அங்கநாடாளும் அர சன். வெண்குடை நிழலிலிருப்பவன் காம்போசநாடன் அவ னயலில் நிற்பவன் துளுவநாடாளும் மன்னன் மற்றவன் கலிங்கநாடாளும் மன்னன் அவன் கேகயநாட்டு வேந்தன். மற்றையர் சிங்களம சோனகம வங்கம மராடம மச்சம் குடகம் காந்தாரம் என்ற நாடுகளை ஆள்வோர் இத்தனை மன்னரில் எவரை நீ ஒப்பாய்? முடவன் கொம்புத்தேனை விரும்பினாற்போல் முகுந்தனைக் காண வந்தாய்? சிராத்தஞ் செய்யும் வீடுகள்தோறும சென்று உண்டு உயிர் உய்க வந்த வழியே மீண்டுபோவது நன்மை.

முனிவர் இவ்வார்த்தையைக் கேட்டு இவையிவை எண் ணுவார்:—மதாணியாம, முத்தாரமாம், பட்டாம, பொன் னாற்செய்த ஊர்தியாம். இவைகளை இப்போது நாம் எங்கே பெறுவது. இவைகளை நம் மூதாதையர் நாளிலும் கேட்ட

நுண்ணிய கருமமும் எண்ணித்துணி என்பதை மறந்து, எண்ணுமல் ஒன்றை இயற்றுதல் என்றும் தீதே யாகும். நாம் கந்தையிற் பொதிந்துவைததிருக்கும் கையுறை யைக் கண்டால் இகழ்ச்சிசெய்து நகைப்பரே.

இங்ஙனம் எண்ணியிருக்கையில், அவ்வறிவிலிகளே நோக்கி அறிவான்ற வாயிலாளர் கழறியுரைத்தனர்:—இத்தபோதனரை யாரென நினைத்தீர்? இவர் பொய்மமையில்லார்: இன்சொல் உடையார்: பல விரதங்கள் காத்தவர்: மறை நான்குமம மற்றும வல்லவர் இக்கண்ணன்மாட் டன்றி இவர் மற்றியாண்டும் செல்வாரல்லர். இவ்வேதியரை மெய்ஞ் ஞானியென்றே கொள்ளல் வேண்டும். மெய்ஞ்ஞானியராவார், மணியாலும் பொன்னுலும் மன்னராலும் பயன்வேண்டார்; கிழங்கோ கனியோ அடகோ பசிவேளை கிடைததகை உண்பர் சிறிதேனுமம நாளைக்கு வேண்டுமெனச் சிநதைசெய்யார். புகழ்ந்தாலும் இகழ்நதாலும் விருப்புமம வெறுப்பும் கொள்ளார். உலகம் நிலைகலங்கினுலும் தம்நிலை கலங்கார். அவர் கட்குப் புண்ணியமென்பதும் இல்லை, பாவமென்பதும் இல்லை: பொய்மமைமயென்பதும இல்லை, மெய்மமைமயென் பதும் இல்லை. அவர்கள் இன்றிருந்த இடத்தில் நாளை இருக்க விரும்பார்: உன்மத்தர்போல் திரிதருவார். கந்தையன்றி வேறு உடார் அவருடைய பெருமையை இற்றென இயம்புல் எவரால் ஆகும்? பொய்ஞ்ஞானியரோ தலையினை முண்டிதஞ் செய்திருப்பர்; தாமே பிரமம் என்பர்; மெய்ஞ்ஞானியர்போல் பேசுவர்; சற்கருமம் செய்வாரைச் சாரார்; சைவ வைணவ வேடங்களை உண்மைவேடம்போல் புனைநதுகொள்வர். இவர்கள் தாம் கெடுவதன்றி மற்றவர்களையும் கெடுக்கும் எண்ணம் பூண்டிருப்பர். பார்ப்பவர்க்கு மிக்க அறிவுடையார் போல் நடிப்பர்; முற்றத்துறந்த முனிவர்போல் காட்டுவர். வழக்கினிடத்து இவர்கள் சமயநோக்கி உயர்திணை வினையை அஃறிணை வினையாக உரைத்தும், படர்க்கைப் பெயரை முன்னிலையிடமாக உரைத்தும், பக்குவமில்லாத மடையரைப் பொருள் பறித்துக் காலங்கழிப்பர். இம்முனிவர் முழுஞானியாயிருந்தும் சற்கருமம் இழந்தவரல்லர்.

அவ்வகைக் கருமத்தினாலே இவர் சரீரமும் இளைத்துளது. இது திண்ணம். எம்மை ஆண்டருளுமாறே இவர் இங்கு எழுந்தருளினார் என்று நினைக்கிறோம். ஆதியில் கண்ணனோடு கலையுணருநாட் பழக்கம் என இவர் உரைத்தது உண்மையே ஆகற்பாலது. இவர் அரசரிடம் கருமமாக வந்தவரல்லர்; கண்ணன் கழலிணையைக் கண்டு பணிவதே கருமமாக வந்தவர். நம்முடைய தீவினை தீரும் நாள் இன்றாதலின் இப்பெருமானைக் காணப்பெற்றோம். ஆ! ஆ!, இப்பெரியாரைக் காண்டொறும் காண்டொறும் உளத்து உவகை பொங்காநின்றது, உடல் முழுதும் புளகம் எழாநின்றது; கண்கள் நீர் சொரியாநின்றன. நா இவரைத் துதித்தற்குத் துடிதுடிக்கின்றது. இப்பொழுதே நாம் விரைந்துபோய், இத்தவராசன் வரவை மகாராசனுக்கு விண்ணப்பித்தல் வேண்டும். அதன்மேல் அவ்வாயில்காவலர் குசேலமுனிவரை நோக்கி "இச்சிறிய மடமையாற் கூறினவற்றைத் திருவுள்ளங் கொள்ளவேண்டா. இமைகொட்டு நேரம் நீர் இவ்விடம் இருத்திர். யாங்கள் கண்ணனைச் சார்ந்து உமது வரவை உணர்த்திக் காற்றினும் கடிது வருவேம்" என்று சொல்லி அவ்விடம்விட் டகன்றனர்.

அகன்று சென்றவர் இடைவாயில்களை விரைவிற் கடந்து திருவோலக்க மடைந்தார். அச்சுதனை அங்கே காணாராகி அங்கு நின்றவர்களை வினவி, அவன் அந்தப்புரத்துளன் எனக்கேட்டு, ஞெரேலென ஓடி மாதர்கள் காவல் செய் வாயிலை நண்ணினர். அந்தப்புரத்தில் சேடியரில் ஒருத்தி கவரியிரட்ட, ஒருத்தி மாடகந் திரித்து வீணையின் நரம்பொலி எழுப்ப, கற்பூரம் ஏலம் இலவங்கம் கூட்டி ஒருத்தி பாகடை உதவ, ஒருத்தி பொற்படியகம் ஏந்த, ஒருத்தி கண்ணடி காட்ட, ஒருத்தி பூஞ்செண்டுதவ, ஒருத்தி பொற்சிரகநீர் ஏந்த, பாதுகை ஒருத்தி கையிற் றாங்க, உருக்குமணிபிராட்டியின் மடிமீது முடித்தலை வைத்து, சத்தியபாமையின் மடிமீது அடிமலர் வைத்து, ஐந்தணை அடுக்கிய அமளி மீது ஐயன் படுத்திருந்தான். துவாரபாலர், காவல்செய் மாதரை அரசனுக்குத் தம்வரவை உணர்த்தும்படி வேண்ட,

அவர்களும் உட்சென்றுணர்த்தி விடைபெற்றுக் கூற, உள்ளே சென்று சிரமிசைக் கரங்கள் கூப்பி எட்டுறுப்பும் நிலத்துறும் படி வணங்கி யெழுந்தனர். வந்த செய்தி என்னென்று கண்ணன் வினவ, அவர்கள் "மன்னர் மன்னனே, துவாரகை நாதனே போற்றி. ஆதிநாள் உம்மோடு கலைகள் கற்றவராம், மிக்க நட்பும் கொண்டவராம் பார்ப்பனக் குலத்தினராய்க் குணத்தின் மிக்கவராய் ஒரு முனிவர் வந்துளார். குசேலர் என்று பெயர் சொல்லப்படுபவராம். அவர் வாயிலில் வந்துளார் விண்ணப்பம் இதுவே" என்றனர். அச்செய்தியைக் கேட்ட கண்ணன், கருணை பொங்கி, "விரைவிற் சென்று அந்த மாதவரை அழைத்து வம்மின் அழைத்து வம்மின்" என்றியம்பினான்

துவாரபாலர் ஓட்டமாக ஓடி, "நாதனுக்கினிய நண்புடையவரே போற்றி உம்முடைய வரவை உரைத்தபோது கண்ணன் கொண்ட களிப்பின் மிகுதியை என்னென்றுரைப்போம்.

நன்னர்நெஞ் சுடைய நீரார் நட்பினிற் சிறந்த துண்டோ

தாயைக் கண்ட சேயைப்போல நேயம் மிக்கவனாகி அழைத்து வம்மின் அழைத்துவம்மின் என்றான் நீர் விரைவின் சென்றணுகாவிட்டால் அவனே எழுந்து வந்துவிடுவன். எழுந்தருள்க" என்றனர்.

உடனே குசேலர் எழுந்து நடந்து அந்தப்புரத்திற்கு அருகிற் சென்றார். செல்லும்போது, கண்ணனும் கதிரவன் வரவு பார்க்கும் கமலமலர்போலவும், குளிர்மதி வரவு பார்க்கும் குமுதமலர்போலவும், மங்குலின வரவு நோக்கும் மஞ்ஞைபோலவும், கண்ணிமையாது குசேலருடைய வரவை நோக்கியிருந்தான். முனிவரும், அதிட்டவீனன் அட்டைச் சுவரியத்தைக் கண்டாற்போல், கண்ணனைக் கண்ணிற் கண்டார்; காண்டலும், கால் விசைகொண்டு நடந்தார் முனிவரைக் கண்ட முகுந்தனும் படுக்கைவிட் டெழுந்து ஓடிவந்து மாதவருடைய மலரடியை வணங்கினான்; பின் உடலெல்லாம் புளகம் போர்ப்ப இறுகத் தழுவிக்கொண்டான்; "நான்

செய்த நல்லறங்கள் பலித்தன. இந்நாள் பாக்கியம் உற்றது. இம் மனையும் யோக்கியம் உற்றது" என்றுரைத்துக்கொண்டாடினான்.

அப்பால் கண்ணன் அம்முனிவரை அரதந பீடத் தெழுந்தருளப் பண்ணினான். பொற்குடத்தில் பூரித்த புதிய மஞ்சனநீ ராட்டி, ஈரம்புலர்த்திப பட்டாடை சாத்தினான்; சாந்தம் பூசிப் பூமாலை வேய்ந்தான் பின்பு தீஞ்சுவை யுணவு உண்பித்துக் கையும் வாயும் பூசினான்: அடைக்காய் உதவி அமளியேற்றினான்; அருகிருந்து முதுகுதைவந்தான்; கவரி யிரட்டினான். மலரடியிரண்டையும் மெல்ல வருடினான். குசேலர் ஒன்றும் செய்யாமலும ஒன்றும் பேசாமலும் ஐயன் திருவுருவைத் தியானஞ்செய்து அசைவற்றிருந்தார் குளவி யின் ஓசையன்றி மற்றொன்றும தோராத புழுவினைப்போல இருக்கும் தன்மைபூண்ட இமமாதவரோ மனையாள் சொற் படி வறுவிதான செல்வததை வேண்டுவர்? கண்ணனுடைய உருவினைக் கண்கள் காண, துளபமாலையின் மணத்தை மூக்கு மோக்க, உரைக்கும் முகமனைச் செவிகள் கேட்ப, அவன் திருமேனியைத் தமமுடல் பரிசிக்க, அவனுக்குரிய ஆயிர நாமஙகளைத தமது நா உருவிட்டுச் செபிக்க, ஐம் புலன்களாலுமம அடையலான ஆநந்தத்தைக் குலேசமுனி வர் ஆர அநுபவித்திருநதார் இங்ஙனம கண்ணனிடத்துத் தம்மனம் கலந்திருப்ப, அவர் தம்மையும் மறந்திருந்தார்.

முனிவர் இங்ஙனம் இருக்க, அவரை நோக்கிக் கண்ணன் உரைக்கலுற்றான்:—உன்னைக் காண்டலால் யான் உடம்பு பூரித்தேன் இந்நாள்வரையில் என் மனத்தை விட்டு நீ அகன்றிலை சந்ததமும் உன்னை நினைத்திருப்பேன்.

ஆயின்மறை முதல்கலைகள் அனைத்துமுணர்ந் தறமறம்பாத்
தே,இனிது நன்றிதுதீ தென்றுணர்த்தும் அவர்நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ மேதையோர்? மறப்பரேல்
நாயினுங் கீழ்ப்பட்டவர்கள் அவர்காண் இந்நானிலத்தே.

நல்லார்சொல் விரும்புவதும் நல்லாரைக் காண்பதுவும்
நல்லார்க்கொன் றுதவுவதும் நல்லாரைப் புகழ்வதுவும்
நல்லார்நன் றென்றுரைப்ப நவிற்றியஇவ் வெலாமடங்க
நல்லார்நட் பென்று முறல் நன்றென்றே நவிலு மறை.

பொன்னுள்ளான் பூமியுள்ளான் புந்தியுள்ளா னாயிடினும்
என்னுள்ளா னவன்அவன் இருந்தவர்தம் நட்பிலனேல்?
பொன்னில்லான் பூமியில்லான் புந்தியில்லா னாயிடினும்
என்னில்லா னவன்அவன் இருந்தவர்தம் நட்புளதேல்?

பேயோடு பழகுறினும் பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால் தூயோரும் புகழ்தூயோ
ராயோர்கள் பெருநட்பை அருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோ எண்மையிற் கிடைப்பின் இகழ்வரோ இகழ்வில்லார்?

சமையம்வரின் இடித்துரைப்பார்; தக்கவழிச் செலச்செய்வார்;
இமையவர்தம் உலகுறவும் இருளுலகம் பகையுமாய்
அமைய அறிவுறுத்துவார். அந்தோ நூல் கற்றுணர்ந்த
கமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கும் அரிதரிது

கூடுதற்குக் கூடாத கூட்டத்துப் படும்நட்பு
வீடுதற்குத் தக்கதாய் நாடோறும் மெலிந்தொழியும்
நீடுதற்குத் தக்கதுநன் னெறிநின்றோர் நட்பொன்றே.
தேடுதற்குக் கிடையாத திரவியமும் அஃதாமால்

முத்திக்கு வித்தாகும்: முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறும்: தேவர்பெறற் கருந்திருவும்
சித்திக்கும்படி அருளும்: செப்பரிதால் அதுநிற்க

உன் மனையாள் உத்தமகுணம் வாய்ந்தவள்தானா? எவ்வித வறுமையுற்றாலும் வெளியில் எடுத்துரையாத இயல்பினள் தானா? நாயகன்மேல் பழி சிறிதும் எடுத்துத் தூற்றாதவள் தானா? சொற்காக்கும் சோர்விலா மாண்பினள்தானா? தன்னுயிராக உன்னுயிரைப் போற்றுகின்றவள்தானா? உன்னுடைய வருவாய்க்குத் தக்க செலவு செய்பவள்தானா? சொன்ன காரிய மனைத்தும் சொன்னபடியே செய்கின்றவள் தானா? உனக்கு மைந்தர் எத்தனை பேர் பிறந்துளார்? அவையத்து அவர்கள் முந்தியிருப்பச் செய்வனவற்றைச் செய்தனையா? உபநயனம் செய்தாயிற்றா? அவர்கள் அருங்கலைகளைக் கற்கின்றனரா? மைந்தர் வேண்டுமவற்றைக் குறைவின்றி நடத்திவருகின்றனையா? தானம் சந்தி தபம் முதலிய நியதிகள் நன்கு நடந்துவருகின்றனவா? இவற்றையெல்லாம் குறைவறச் செய்ய உடல் உரமுற்றிருக்கின்றதா? நாம் இருவேமும் இத்தனைநாள் கழிந்தபின் இன்று கூடினோம்.

நள்ளார்கள் அண்மைக்கண் இருந்தாலும் நட்புறுத்தார்:
விள்ளார்கள் சேய்மைக்கண் இருந்தாலும் விருப்பொழியார்:
தள்ளாத பல்பொருள்கள் தனைச்சூழ இருந்தாலும்
உள்ளாதவன் கதிரை உறநோக்கும் நெருஞ்சியே.

மடமையார் உறுநட்பே மருவுபெருஞ் சுகங்காணும்.
உடனுறைதல் ஒருவுமிடத் தொருதுன்பும் உறலின்று;
படர்தலும்இன் னுருவேனை பகர்தலும்இன் னுருகுமால்.

ஐய! நீ குடியிருக்கும் அணிநாட்டில் வெள்ளக்கேடு வறட்கேடின்றி மாத மும்மாரி பெய்கின்றதா? கிளி விட்டில் முதலிய வற்றால் கேடின்றிப் பைங்கூழ் விளைகின்றதா? கள்வராலும் காட்டு மிருகங்களாலும் துன்பமின்றிக் குடிகள் இனிது வாழ்கின்றனரா?

இங்ஙனம் சுகபோகக்கூடமங்களை உசாவிக் கண்ணன் பின்னும் உரைக்கலுற்றான்:—இளமையில் சாந்தீப முனிவரிடம் ஓதுநாளில் நாம் ஒருவரோடொருவர் பேசியிருந்த பேச்செல்லாம் நினைவிருக்கின்றதா? ஒருமுறை குருபத்தினி அமுதடுதற்கு எரிகரும்பின்றி இடர்ப்படுவார், நம்மிருவரையும் அது கொண்டுவருக வென்று வேண்ட, நாம் காட்டுள் சென்று விறகொடித்துத் திரிந்தனமே. அப்போது காற்றுமழை கலந்தடிக்கவே நாம் குருந்த மரத்தின் அடியில் தங்கியும் கொன்றை மரத்தின் அருகில் குறுகியும் செய்வதுணராது திகைத்து நின்றனமே. அப்போது நம்முடைய தலை நனைந்தும், முகமும் கையும் காலும் நனைந்தும், உடல் நனைந்து விறகும் நனைந்ததே. மழையும் விடாமல் மேலும் மேலும் சோனை மாரியாகப் பெய்யவே, அடியில் புறங்கா லளவாய்ப் பின் கணைக்கால் முழங்காலகளி னளவாய்ப் பெருகும் வெள்ளம் அரையளவும் ஆயிற்றே. ஊற்று மாரியும் ஒழிதலின்று: இனிச் செய்வது என்னென்று இருவேமும் இடர்ப்படுகையில் ஒரு கொடிய குளிர்காற்று வந்து கடுகிச் சுழலவே, பறவையெல்லாம் தத்தம் குடம்பைபுக் கொளிப்ப, விலங்குகளெல்லாம் போத்தொளிப்பக் கதிரவனும் குடபால் மறைந்தனனே. பின் காரிருள் கம்மிக்கொள்ள, நாம் ஒருவர் கரம் ஒருவர் பற்றி, மேடுபள்ளம் உணராமல் குளிர்காற்றால்

நடுங்கி மயங்கிக் காலால் வழி தடவி, இருள் புலருமளவும் ஓரிடம் உற்றிருந்தோமே. கதிரவன் குணபால் எழுந்த வளவில், குருநாதரான சாந்தீப முனிவர் 'ஐயோ பிரமசாரியர் எங்குற்றனர் கொல்? என்னுற்றனர் கொல்?' என நம்மைத் தேடிக்கொண்டு காட்டிடை நண்ண, நாமும் அவரைக் கண்டு பணிந்தோமே. பணிந்துநின்ற நம்மைக் கண்டு ஆசிரியர், 'தொண்டுபுரியும் மாணவரிற் றாயீர், உம்மைப் போல்வார் யாவருளர்? என் பொருட்டாக மழையில் நனைந்தீர். இரவெல்லாம் நித்திரையின்றி வருந்தியிருந்தீர். கற்ற கடனும் இறுத்தீர். உமக்குக் கல்விப்பொருள்போலச் செல்வப்பொருளும் மல்குக. நலமிக்க நன்மனைவியர் வருக. மைந்தர்கள் பல்குக. சுற்றம் பெருகுக. வாழ்நாளும் வளர்க' என்று சிகூறி, நம்மைக்கொண்டேகினாரே. அதெல்லாம் நினைவிருக்கின்றதா?

மேலும் குசேலனை நோக்கிக் கண்ணன், "இத்தனை நாள் கழித்து இங்கு வந்தனையே எனக்கு என்ன கொண்டு வந்தாய்? அதனை இப்பொழுதே தருதி. இனிய சிற்றுண்டி ஏதேனுமின்றி நீ வருவாயோ? உன் மனைவியும் உன்னை ஒன்றுமில்லாமல் வெறுங்கையாய் விடுவாளோ? இனிய சிற்றுண்டியை எனக்கன்றி எவர்க்குக் கொணர்ந்தனை? அதனை அளித்தி" என்று தன் கரங்களை மலர்த்தி நீட்டினான். குசேலரும், பாலுண்பான்பால் புளிங்காடியைக் கொடுத்தது போல, அதனைக் கொடுத்து வாளா இருந்தனர்

குசேலருடைய உள்ளத்தை அறிந்த கண்ணன், கந்தையிற் கட்டிய அவலை வாங்கிப் பக்கலில் வைத்து முடியவிழ்த்து, ஒரு பிடி யெடுத்து அதிக அவாவுடன் வாயில் போகட்டுக் கொண்டான் "இது இனிய சுவை யுடையது; இல்லின் அமைத்தது; பழைது மன்று விலைபபாலிற் கொள்வது இவ்வளவு இனித்திராது" என்று கூறி அவ்வொரு பிடியைத் தின்றனன். "இவ்வவலில் ஒன்றேனும் முனை முறிந்ததுவும் இன்று. முட்டையும் இன்று. இது பட்ட கையும் மணக்கும். இதனை வாயில் போகட்டால், அம்ம, ஒரு சிட்டிகைச் சருக்கரையும் வேண்டா" என்று களிப்புற்றான் இரண்டு கொடிற்றினும்

அதனை ஒதுக்கிப் பதமுறச் சற்று ஊறவைத்து, மென்று மென்று, சிரம் பலமுறை அசைத்து இன்பமாக அதனைத் தின்றான். "எனக்கு அவலின்மீது மிக்க விருப்புளதென்று கேட்டுளாயோ? நான் உன்னிடம் முன்னெப்போதும் உரைத்ததும் இல்லையே" என்று சொல்லிக் குசேலருடைய அன்பையுங் கூட்டி அவ்வொருபிடியைத் தின்றான்.

அரிய வன்பினிற் கொடுத்தல் இழிந்ததாயினும் சிறந்த
திரியு மன்பினிற் கொடுத்தல் இழிந்ததே சிறந்ததேனும்

மற்றொரு பிடியெடுத்து வாயிலிடப் போகும்போது, உருக்குமணிப்பிராட்டி பொருக்கென வெழுந்து ஓடிவந்து கணவன் கையைப் பிடித்துக்கொண்டாள். அவன் தின்ற ஒரு பிடி அவலுக்கே சகம் கொள்ளாத பெருஞ்செலவம் கிடைக்கும்; அஃதன்றி மீட்டும் ஒருபிடி எடுத்துண்டால், கண்ணன் குசேலருக்குப் பலநாளும் அடிமையாய் அமர்தல் வேண்டுமே என்றஞ்சியே அந்தப் பிராட்டி அவன் கையைப் பிடித்துத் தடுத்தாள். உண்ட ஒரு பிடி அவலோடு மிக்க மகிழ்ச்சிகொண்டு துதித்துப் பல முகமன் சொன்னான். அன்றிரவு கண்ணன் அந்தப்புரத்தில் ஒரு படுக்கை யிட்டு அதில் முனிவரைக் கண்படைகொள்ளப் பண்ணினான்.

வைகறையில் விழித்தெழுந்து கடன் பலவும் முடித்துக் கொண்டு, குசேலர் கண்ணனை வாய்திறந்து ஒன்றுங் கேளாராகி நிதியம் மிகப் பெற்றார்போன்று உவகையோடு விடைபெற்று, ஊர்க்கு வழிக்கொண்டார். கண்ணன் வாயில்வரையில் வழிவிடுத்து, ஆர்வத்தோடு அடியில் விழுந்து வணங்கி மீண்டான்.

கண்ணனுடைய செய்கையெல்லாங் கண்ட மடமாதர்கள் ஒருவரோடொருவர் பலபடப் பேசுவாராயினர், அவனுடைய மாயச்செய்கையை உணரார் ஆதலின் "தாயைக் கண்ட சேயென உள்ளந் தழைத்தான்; எதிர்கொண்டழைத்தான்: காலில் விழுந்தான் நேயமுளானென்று ஊரறியச் செய்தான். ஆயினும் அம்முனிவருக்கு ஒன்றுங் கொடுத்திலன். நன்று நன்றிது" என்றனர் சிலர். "அவரைக் கட்டியணைத்தான்:

புகழ்ந்தான்: தொழுதான்: பள்ளிமீ தமர்வித்தான். ஒன்றும் அளித்தானல்லன். உதயத்தில் ஊருக்குச் செல்ல விடை கொடுத்தான் இது நன்று நன்று" என்றார் சிலர் சில மாதர் "எளியோர், பாவம். இத்தனை தூரம் ஏன் வந்தார்? கண்ணனோ தேனொழுகப் பாலொழுகப் பேசிக் களியாநின்று ஒரு காசுங் கொடாமல் கழிக என்றான் நல்லோர் இவன் வார்த்தையைத் தெளியார்" என்றனர் "எத்துணைச் செல்வம் மிக்கிருந்தாலும், ஈத்துவத்தலென்பது இவன்பா லில்லை அம் மறையவரும் இவனுடைய நயமொழிகளால் மயங்கி, ஒன்றுங் கேளாது சென்றனர். இவனும் மகிழ்ச்சியுடனே வழியும் விட்டுப் பெயர்ந்துவந்தான் இவர்கள் நட்பிருந்தபடி நன்றாயிருந்தது இவ்வகை நட்பு இருந்தென், இராவிடின் என்?" என்றனர் சிலர் இவையெல்லாம் இங்ஙனம் இயம்பச் சிலர் "அவர் என்ன நினைத்து வந்தனரோ? இவன் யாது நினைத்திருக்கின்றனனோ? இவன் மாயையை உணர்வார் எவர்? வாயில் வந்தவாறு நாம வார்த்தைசொல்வது நன்றன்று" என்றனர்.

## III

குசேலமுனிவரும், துவாரகையின் தெருக்கள் பலவுங் கடந்து, கடலைக் கடந்து, தன்னூர்க்குச் செல்லும் வழியைக் கூடி மிகமகிழ்ந்து நடக்குங்கால், மெலிந்த இவருடம்பு கண்ணனருளால் பூரித்தது பழங்கந்தை பட்டாடையாய்ச் சமைந்தது துளபமணிமாலை முத்துமாலையாயிற்று தருப்பைப் பவித்திரம் தமனியமாய் விளங்கிற்று. வழிநடை யிளைப்பு முதலியன சற்றும் இலவாயின வெயிலும் குளிர்ந்தது; பாலையும் பசந்தது இளமென்காற்றும் இன்புற வீசியது மன்னர் மன்னர்க்குரிய பல சிறப்புக்களும் தோன்றின இவ்வதிசயமெல்லாம் எதிருறக்கண்டு "இவையெல்லாம் எம்பிரான் அருள்" என்று இறும்பூ தெய்தினர். அரசர் முதலாயினோர் அடுத்து ஏவலர்போல் பின்படர்ந்து வரக் குசேலர் தம் ஊர்ப்புற மடைந்தார்.

ஊருட் புகுங்கால் ஊரிலுள்ளவர் அழகிய கையுறைக ளோடும் அட்டமங்கலங்களோடும் ஆர்க்கும் பல வாச்சியங்க ளோடும் எதிர்கொள்ள வந்தனர் மறையவர் மங்கலம் பாட, மாதவர் வீதி சார்ந்தார் முனிவருடைய வைபவத்தைக் கண்ட மாதர்களில் பலர், "இம்மறையோர் செய்த புண்ணி யம் எத்தன்மைத்தோ? இவ்வித வைபவங்களைப் பெற்றாரே" என்பர். "கிள்ளிப் பற்றுதற்குத தானும் தசையில்லாத உடலில் பழங்கந்தையைச் சுற்றித் திரிபவர், மழமழத்த மேனியோடு வருவதைக் காணீர்" என்பார் சிலர். "கந்த மூலம் புசித்தும் கானில் வசித்தும் பெருந்தவம் செய்வார களில் இவர் பெற்ற பேறு எவர் பெற்றனர்?" என்பர் சிலர் "மனமொழி மெய்களைக் கண்ணன் கழலிணைக்கே யாக்கி நன்னெறியில் நிற்கும இம்முனிவர் பெறலான செல்வம் இவ் வளவேயோ? இன்னும் உண்டு" என்பர் சிலர் சிலர்,

"சான்றவர் திருவுற்றாலும் தகுதியில் மிடியுற்றாலும்
ஆன்றதம் நீர்மை குன்றார் அடல்வலிச் சனகனென்பான்
ஏன்றசெந் தண்மைவெம்மை இடைச்சமம் கொண்டாற்போலத்
தோன்றுவர் மயக்கம் பூணர் துடியிடை மடவீர்"என்பார்.

மாதர்கள் இங்ஙனம வகுத்துரைப்ப, முனிவர் தன் ரவாயிலை அடைந்தார் சிற்றிலைக குடிலும முன்னைநிலை பெருமாளிகையாய்ப பல வளங்கள் நிறைந்து விளங் கக் கண்டார் மனைவியும மணிகுயிற்றிய அணிக ளணிந்து, அழகிய ஆடை உடுத்து, முன்னிலும் இளையளாய்க் காணப் படுவாள், கணவனைக் கண்டு எதிர்கொள்ள வந்து நின்றாள். குசேலர் உடனே திருமாளிகையினுள்ளே புகுந்தார் அணி கலப் பெட்டிகளும் ஆடையடுக்கிய பேழைகளும் தனித்தனி வகுத்து நிரல்பட அமைத்திருந்தனவற்றைக் கண்டார். பொற்கலங்களை எதிரில் வைத்து, அறுசுவை உண்டி படைத்து உபசரித்தூட்ட, வேண்டா என்போரும், அத னைத் திரும்பிப்பாராது செல்வோரும், பசியில்லை என் போருமாய்ச் செல்வப்பிள்ளைகள் செருக்கியிருப்பதைக் கண் டார். வயிரச்சுட்டி நெற்றியில் விளங்க, மார்பில் மதாணி அசைய, காத்தில் கடகமும் காதில் குழையும்

அரைமிசைப் பொன்ஞாண் அவிர, அடிகளில் சிறு சிலம் பொலிப்ப இளஞ்சிறார் விளையாட்டயருதல் கண்டார். அட் டிற் சாலையில் உப்போடொன்பதும் பருப்பொடு பததும் பல வகைக் கலங்களும் பொலிவதைக் கண்டார்

காணுங்காலையில் சுசீலை அவர்முன் விரைந்து போநது நெய்யிட்டு நீராடுகவென்று வேண்டினாள் அதற்குள் ஆதனம் அமைத்தாள் ஒருத்தி முனிவர் அதன்மீ திருநதனர் ஒருத்தி ஒரு பொன் வள்ளத்தில் நெய்யிட்டு வைததாள் ஒருத்தி சிவிறி வீசினாள் நெய்யைத் தலையிற் பூசி அங்கததும் அப் பினாள் ஒருத்தி பின் முனிவர் மஞ்சனச்சாலையை அடைந் தார் ஆங்கு மாதர் பலர் கூடி, நெய்யகற்றி வெநநீர் வாக்கிட மூழ்கி, ஈரம போக்கி ஆடையுடுததது நியதிக்கடன் முடித்து, உணவுகொள்சாலையை அடைநதனர்

உணவுகொள்சாலையில சுசீலை தலைவாழையிலைகளைப் பரப்பி நீர் தெளித்து, அவைகளில் கருணையும், வறையலும, தீங்கறியும, புளிங்கறியும், கூட்டும, ஊறுகாயும், நோலையும், அடையும, சிநதிரான்னமும், பாற்சோறும, சோறும இலை மறையப் படைதது, பருப்பிட்டு நெய்விட்டு உபசரிப்ப, வேதியர் கூட்டத்துடனே முனிவர் உட்கார்நது உண்டார். விருந்தினர் விலாப்புறம் வீங்க உண்டெழுநதனர் குசேலர் கையும் வாயும பூசிக கநதம பூசித தாமபூலங் கொடுத்து அவர்களைப் போகவிட்டார் உடன் வநத மன்னர் முத லானவர்க்கும இங்ஙனம விருநதிட்டனுப்பினார் இங்ஙனம் முனிவர் இல்லறமியற்றி இன்பநுகர்நது சிலகாலம் போக்கி யிருந்தார்.

பின் ஒருநாள் ஓரறையினை அடைநது, மக்களும் மனைவி யும் உறுதபடி தாளிட்டுக்கொண்டு, ஒருததராயிருந்து சிந் திக்கலானார்

இம்மைதனில் மற்றிரும் பொருளை ஈட்டல் காத்தல் அழித்தலென
வெம்மைபுரி மூவகைத் துயரும் விளையாநிற்கும் பாவத்தால்
அம்மை நிரயத் துயரும் உறும் அந்தோ சீசீ இப்பொருளைச்
செம்மையுடையோர் வேண்டுமெனச் சிந்தித்திடுவரோ மறந்தும்?

ஊழின் வலியால் பெருஞ்செல்வம் உறினும் காலம் உண்டாக
வாழுங் கருத்தராய்த் துணிவுற் றடங்கத் துறப்பர் அறிவுடையோர்,
தாழும் அஞர்போய் ஒழிதலன்றித் தகு மிம்மையிற் கரண மூன்றும்
வாழி இலக்கிற் சிதருமை மருவப் பெறுமபே ரின்பத்தால்.

உடல்முற் பொறிகள் தமக்குரிய ஊறுமுத லைம்புலங்களையும்
அடல் நற்சொரூழில் அப் புலனிமித்தமாகப் படைத்த அனைத்தினையும்
விடல் மிக்கதுவால் எவற்றினுக்கும் விருப்பிற் சில உள்ளனவேனு
படரும் மனம் மற்றவ்வழியே பயக்கும் அளவில் பவத்தொடர்ச்சி.

தானல உடலை யானென்றும் தன்னோ டுரிமை யல்லாத
ஈனம்உறு பல்பொரு ளனைத்தும் என்னதென்றும் உறநினைத்தும்
ஆன வயர் பற்றினுக் கேது மயக்கம் அதனை மாய்ப்பவனே
வானவரும் செல்லரு முலகம் புகுவான் என்னும் மறைநூல்கள்.

பற்ற லாகா இருவேறு பற்றை இறுகப் பற்றினரைப்
பற்ற லாகா என வருநர்கள் பரிந்து கண்ணோட்டஞ் செயுமே
பற்ற? எல்லாம் அறத்துறந்த பண்பினோரே தலைப்பட்டார்
பற்ற லுடையார் எஞ்ஞான்றும் காண்பர் நிலையில் பல்லவையும்

அன்றே யுள்ள அவித்தையெனல் அஞ்ஞானமம பல் விதமதித்(து)யான்
என்றே யெழுதல் அகங்காரம். இதுவேண்டுவ தென்றெழுதல் அவா.
சென்றே அதுபற்றுதல் ஆசை. மறுப்பின் சேறல் சினம் ஐந்தும்
நின்றேகிட நோய் ஒழியுமென நிகழ்த்தாநிற்கும் நியம்பிய நூல்

எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் எழுமைப் பவமும் ஈன்றிடும் வித
தொல்லா அவாவே அப்பவத்தின் உறுகுன் பறிந்தோன் உதியாமை
யல்லால் மற்றும் வேண்டுமோ? வேண்டானல் அவ் வுதியாமை [ம்
சொல்லார்ந் திலங்கும் வேண்டாமைதன்னை வேண்டத் துனைவின்வரு

அற்றா னென்று சொலப்படுவான் ஆசையற்றான் ஒருவனே.
மற்றாதாவின் அஃதொன்றும் வைத்துப் பிற வேதுக்க ளலாம்
செற்றா னெனினும் அவையாக்கும் செயிர்த்துன் பகன்றா னேயன்றி
உற்றார் வணங்கு மவன்போல ஒழிந்தான்கொல்லோ உறுபிறவி.

மெய்யை யுணர்தல் முடிவாக வேண்டும் கருவியெலாம் பெற்றுச்
செய்ய முத்தி அடைவதற்குச் சிறந்துளோனை மறவிவழிப்
பைய நுழைந்து பவமீட்டும் பாய்த்திக் கெடுக்க வல்ல தவா,
ஐய அதனுக் குளநடுங்கி அஞ்சிக் காத்தல் அறிஞர் தொழில்.

வகலா லிம் மனைவாழ்க்கை யகத்தே யிருந்து முத்திதனைப்
போத வடையத் துணிவதுதான், புணையா மஞ்சுதுயில் பொருப்பைத்
தாதன் மிகுதியாற் பெயர்த்துக் கத்தும் தாங்கக் கடலிடையிட்
டேத மகல அதுபற்றி ஒருவன் கரையேறுதல் போலும்.

மனையில் பெருஞ்செல்வத் துறைவோன் மருவுதியானம் உறச் சிறிது
நினையின், காண வருவாரை நேர்சென் றழைத்துத் தழுவிடவும்,
வினையத்தினும், விநோ தத்தினும், விரும்பிப் பேசிடவும், அவர்கள்
நினையப்பட்ட தளித்திடவும், பொழுது கழியும், நினைப்பழியும்

ஒன்றும் பெறுதல் இலரெனினும் உற்ற பெருஞ்செல்வத்தினர்பால்
சென்று கொளுநட் புடையரெனத் தேயம் சொலற்கே சிலர் சூழ்வார்.
மன்ற என்றாயினும் ஓர்பயன் வழங்கலாகும் என மூடல்
துன்று நறுநெய்க்குடத் தெறும்பு சூழ்தல்போலும் சிலர் சூழ்வார்.

பொறையின்றேனும்பொறையுடையாய்,புகழின்றேனும்புகழுடையாய்
நிறையின் றேனும் நிறையுடையாய், நீதி யுடையாய் இன்றெனும,நல்
துறையின் றெனுநல் துறையுடையாய், என்று சூழ்வர் கேட்டவர்கள்.
அறைகின்றனா பல்லோரும் நமக் கடைந்தவெலாமென் றகங்களிப்பர்

களியின் தெய்வ சிந்தனையும் கழிந்தே நிறகும். அது கழிய
அளியின் சிறந்த நல்லறமும் அகன்றே நிற்கும் அஃதகல
ஒளியிற்றிடவந் திருளடைந்தாங் குடற்றும பாவம் வந்தடையும்.
விளியின் கொடிய நிரயமெலாம் புகுந்து கிடக்கும் வேலை மிகும்.

அந்த நிரயக் கொடுந்துன்பத்தைப் படுவார் எவர்? அதனை
உள்ளினும் உள்ளம உளைகின்றது இவையெல்லாவற்றுக்கும்
காரணம் செல்வமே

இங்ஙனம் சிந்தித்து அச்செல்வத்திற்கு அஞ்சினாராகிக் குசேலர், "இவ்வருத்தமெல்லாம் ஒழியும்படி எமபிரானை ஏத்தித் துதிப்பேன்" என்று கருதி, அவதார வைபவங்களை வைத்துப் போற்றுதல்செய்து, கண்கள் நீரரும்ப இரண்டு கைகளும் தலையின்மேல் ஏறிக்குவிய நெஞ்ச நெக்குருகி மனக்கசிவுற்றார் அப்போது துந்துபி முழங்க, அமரர் அலர் மழை பொழிய, பக்தவற்சலனை பகவான் பிராட்டி சமே தனாய் மனத்தினுங் கடுகி வெளிவந்து நின்றான். அவ்வள விலே அவனடியில் அட்டாங்கதண்டம் பண்ணியெழுந்து, முடிமேல் கரங்களைக் கூப்பி, மும்முறை வலம் வந்து, அடிமீது

அன்பு பொங்க, ஆநந்தக் கண்ணீர் வார, இருந்தழலிட்ட இழுதுபோல் உருகிநின்ற முனிவரை நோக்கிக் கமலக் கண்ணன், "மாதவ! விரும்பிய வரம் என்ன? விளம்புவாய்" என்றனன்.

அதற்குக் குசேலர் "இச்செல்வம் இன்பந் தருவது எட்டுணையும் இன்று மனம் மொழி செயல்களை உன்னடிக்கே செலுத்தும் நாயடியேன் இந்தக் கனவெனும் செல்வத்தில் ஆழ்ந்து எத்தனை நாள் கழிப்பேன். நான் மேற்கொண்ட விரதங்கள் அழிவுறுகின்றன

உடலழுக் ககற்றத் தூநீர் உற்றவன், அள்ளல் வாரி
இடனுறப் பூசிக்கொள்வான் கொல்? இருகாலும் யாத்த
தொடர்செய் பொன்நிகளம் சீக்கத் துணிந்தவன், இரும்பால் செய்யப்
படு பெரு நிகளம் பூண்டுகொள்வனோ பாரிடத்து?

ஆதலால் ஐயனே, அநித்தியமாகிய செல்வத்தை வேண்டுகின்றிலேன் முன்னிருந்த மிடியே இன்னும் வேண்டும். இவ்விருப்பினை நீ நிரப்புக" என்றார்

மாயவன் அதுகேட்டு முறுவலித்து "நற்பொருள் வேண்டாது நல்குரவை நல்குமபடி வேண்டும காரணம என்னை?" என்று கேட்ப, முனிவர் "காரணந்தான் முன்னர் அடியேன் செய்த விண்ணப்பத்தால் வெள்ளிடை விலங்கல்போல விளங்கிக் கிடப்பவும், ஒன்றும் அறியான்போன்று நீ இங்ஙனம் வினவுதல் தகுதியாமோ? நின்னடிகளைப் போற்றி நாள்களைக் கழிக்கும் எனக்கு இச்செல்வம் இடையூறாயிற்று ஆதலின் எம்பிரானே கருணை செய்க" என்றிரந்து அடியில் விழுந்தார்

அமலன் அது கண்டு "வெம்புறேல், கவலை யொழிக" என்று சொல்லி, முனிவருடலைத் தடவி, "நீ உம்பர்க்கும் அரிய இன்பம் பெறுவை உனக்கு முன்னே திருவளித்தது உன்னைச் சேர்ந்தவர் பொருட்டாக உன்னைச் சார்ந்தவர் துன்புறுவது தகுதியன்று. ஆதலின் அதனை யெண்ணி மன மயங்கல் வேண்டா.

மெய்ப்பொருள் உணர்ந்த தூயோர் மேவி எங் குறைவ ரேனும்
பொய்ப்பொருள் பற்றுவாரோ? பொய்ப்பொருளேனும் வந்து
கைப்படப் பற்றுங்கொல்லோ அவரை அஃ தசத்துக் கண்டாய்.

மருந்தும் மந்திரமும் உள்ளாரைப் பாம்பின் விடம் என் செய்யும்? அச்செல்வம் உன்னை என்ன செய்யும்?

சாற்றுமெய் யறிவினோர்கள் தகுதொழில் இயற்றுங்காலை
மாற்றுத லின்றாய்த் தாம் தாமரையிலை நீர்போல் நிற்பர்.

உனக்கு இந்தப் பந்தம் பொருந்தாதாயினும், நீ நீடுவாழ்ந்து இறுதியில் நம்முலகஞ் சேர்ந்து இன்புறக்கடவை நீ மீட்டும் திருவை வேண்டுவ தின்றெனின், யாம் காதலிக்கும் திருவை நீ இகழ்ந்தா யாவாய். நீ இகழ்வதற் கஞ்சி அவள் உன்னிடம் தங்காது நீங்கினால் நாமும் அவளோடு உன்னைவிட்டு நீங்கு வோம் ! இவ்வார்த்தையை இனிது கொண்டமைக" என்று கூறி மாயவன் மறைந்தருளினான் !

மறைதலும், முனிவர் "இவன் திருவுள்ளம் இருந்தபடி இதுவோ" என் றண்ணி. நீரிலிருந்தும் அநநீர் உள்ளுறாத கடையேபோல், இல்லறத்திருந்தும் எதிலும் பற்றிலாராகி, அவனுடைய (இணையடிமறவாது இன்புற்று நெடுங்காலம் வாழ்ந்திருந்தார்)

ஒப்பிலா முனிவன் பின்னர் ஒருதினம் வான நாடர்
வெப்பிலாக் கற்பகப்பூ விரைகெழு மாரி பெய்ய
வைப்பின் மெய்யடியார்க் காய வைகுந்தவுலகஞ் சார்ந்து
திப்பிய உருவ மாயன் சேவைசெய் தின்புற்றானே.

# சாத்துக்கவி

உ5578

சீரேறு பல்வளனும் செறிந்தோங்கும் வடமதுரா
செய்தவத்தால்
பாரேறு பல்லாசும் பணிந்தேத்தத் தனிக்குடைக்கீழ்ப்
பயமைந்தோட
நீரேறுங் கோலோச்சுங் கண்ணபிரா னுடனட்பு
நேர்ந்துவாழும்
ஏரேறுங் குசேலனெனும் இருந்தவத்தோன் பெருங்கதையை

கற்றவர்கட் கன்றிமற்றை யோர்க்குமெளிதாய் விளங்கநயங்
கனியியற்சொல்
சொற்றதிரி சொல்களுன்ற கத்திய ரூபமாகத்
துதைந்தசெய்யுள்
உற்றநடை போலியற்றி யவருமுளங் களிதூங்க
உரைத்தான்கல்வி
துற்ற சுப்பராயனெனுங் கலைவல்லோன் செய்தவத்தால்
தொன்னீர்வைப்பில்

கங்கைகுலந் தனில்வந்தோன் கலைபயிலு மாணவருள்
கனிந்தமேலோன்
பொங்குமங்கி லேயபா டையினுமிகப் பயிலுவோன்
பொலியுமர்தத்
துங்கமிகு பாடைநடை துகளிலாத் தமிழ்நடைமுற்
றொருங்குதேர்வோன்
புங்கமுறு கவிவல்ல செல்வகே சவராயப்
புலமையோனே.

சோடசாவதானம் தி. க. சுப்பராய செட்டியார்,

*Lat. Tamil Pandit,*

*Government Normal School.*